பக்கங்கள் 17+6

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## ஜனாதிபதித் தேர்தலில் குவியும் வேட்பாளர்கள்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களில் இருந்து 10 இற்கு மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள் என தெரியவருகின்றது.

04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 14 சனிக்கிழமை 27.04.2024 அதிர்வு 271

## சிவராம், ரஜீவர்மன் நினைவேந்தல் நிகழ்வு



(எஸ்.நிதர்சன்)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான சிவராம் மற்றும் ரஜீவர்மன் ஆகியோரின் நினைவேந்தல் நிகழ்வு இன்று யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்றது.

யாழ். ஊடக அமையத்தின் தலைவர் கு.செல்வக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். ஊடகவியலாளர்கள் பலரும் கலந்துகொண்டு ஊடகத்துறைக்காகத் தம் இன்னுயிரை நீத்த ஊடகவியலாளர்களுக்கு தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

02

## இலங்கை அரசின்

# மனித உரிமை மீறல்களை கடுமையாகச் சாடியுள்ளது சர்வதேச மன்னிப்புச் சபை

**சர்வதேச மன்னிப்புச் சபை, தமது உலகளாவிய வருடாந்த அறிக்கையில் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களைக் கடுமையாகச் சாடியுள்ளது.**

**அதன்படி, நீதி மற்றும் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான விடயத்தில் இலங்கை அரசு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதனையும் காணாத நிலையில், தண்டனையின்மை தொடர்ந்தும் நிலைபெற்றுள்ளது என்று சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.**

04

AMNESTY INTERNATIONAL



## இந்தியத் தூதுவரை நேரில் சந்தித்த பஸில்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநரான முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் இந்தத் தகவலை தமது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளது.

அரசியல் சூழ்நிலை உட்பட பரஸ்பர நலன்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## ரணில் இல்லையேல் மீண்டும் வரிசை யுகம்

### ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே இந்த நாட்டை மீட்க முடியும். அவரின் பயணப் பாதையை மாற்ற முற்பட்டால் நாட்டில் மீண்டும் வரிசை யுகம்தான் உருவாகும்."

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறிய தாவது:-

04

# சிவராம், ரஜீவர்மன் நினைவேந்தல் நிகழ்வு



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளரான "தராக்கி" என்றழைக்கப்படும் தர்மரத்தினம் சிவராம் கடந்த 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி கொழும்பு, பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் வைத்து வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்துக்கு அருகில் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

ஊடகவியலாளரான செல்வராஜா ரஜீவர்மன் "உதயன்" பத்திரிகையின் அலுவலக செய்தியாளராகக் கடமையாற்றி வந்த வேளை கடந்த 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி காலை 10 மணியளவில் யாழ். ஸ்ரான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

























# சுவீடனுக்குச் சென்ற அநுரகுமார எம்.பிக்கு விமான நிலையத்தில் அமோக வரவேற்பு!

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இன்று காலை சுவீடனின் ஸ்டாக்ஹோம் விமான நிலையத்தைச் சென்றடைந்தார். அங்குஅவருக்கு அந்நாட்டில் வசிக்கும் இலங்கையர்களால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் இரவு இலங்கையிலிருந்து சுவீடனுக்குப் பயணமானார்.

இந்நிலையில், சுவீடனில் நடைபெறவுள்ள மக்கள் சந்திப்பு மற்றும் சிநேகபூர்வமான சில ஒன்றுகூடல்களில் அவர் பங்கேற்கவுள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் சுவீடன் குழுவால் இந்நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# 2 கிலோ மீற்றர் தூரம் நீரில் அடித்துச் செல்லப்பட்ட இரண்டு வயது குழந்தை நீரில் மூழ்கி உயிரிழப்பு!

பொலனறுவை, வெலிகந்தப் பகுதியில் கால்வாயொன்றில் தவறி வீழ்ந்து குழந்தையொன்று சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரம் நீரில் அடித்துச் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளது,

நேற்று இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று வெலிகந்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெலிகந்த பகுதியைச் சேர்ந்த இரண்டு வயது ஆண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குழந்தையின் தாய் நிகழ்வொன்றில் கலந்துகொள்வதற்காகக் குழந்தையை மூத்த மகளிடம் ஒப்படைத்தார்.

இதன்போது குழந்தை வீட்டின் பின்புறமுள்ள வயல்வெளியில் நிலையில் அருகில் இருந்த கால்வாயில் தவறி வீழ்ந்து நீரில் அடித்துச் செல்லப்பட்டது.

இதனைக் கண்ட வெலிகந்த, சிங்கபுர பிரதேசத்தில் உள்ள தனியார் நெல் ஆலையொன்றின் ஊழியர் ஒருவராலும் அங்குள்ள சிலராலும், குழந்தை மீட்கப்பட்டு அவசர அம்புலன்ஸ் சேவை மூலம் குழந்தையை வெலிகந்த வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

பின்னர், வெலிகந்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது குழந்தை உயிரிழந்தது.

குழந்தையின் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த நடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குழந்தை நீரில் அடித்துச் செல்லப்பட்ட வேளை, குழந்தையின் தந்தை தோட்டத்துக்குப் பின்புறம் உள்ள மாட்டுப் பண்ணையில் இருந்துள்ளார் என்றும், மூத்த சகோதரி சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்தார் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# பாதாளக் குழுவைச் சேர்ந்த 6 பேர் கைது!

பாதாள உலகச் செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட 20 குழுவினரால் நாடளாவிய ரீதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பாதாள உலகக் குழுக்களைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புகளைப் பேணினார்கள் என்று கூறப்படும் 29 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தின் வடக்கு பிராந்திய பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கொட்டுகொட, மொரட்டுவை மற்றும் மோதரை ஆகிய பகுதிகளைச் 47, 43 மற்றும் 44 வயதுடைய மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இராஜகிரிய பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் அஹுங்கம பகுதியைச் சேர்ந்த 42 மற்றும் 38 வயதுடைய இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பில் இதுவரை பாதாள உலகக் குற்றக் குழுக்களைச் சேர்ந்த 638 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## ரணில் இல்லையேல்...

“ஒக்டோபர் 17 ஆம் திகதிக்கு முன்னதாக அரசமைப்பில் உள்ள ஏற்பாட்டுக்கமைய ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பது போல் நிராகரிக்கும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலின்போது மக்கள் அதனைச் செய்யலாம். 225 எம்.பிக்களை வேண்டுமானாலும் நிராகரிக்கலாம். ஆனால், ஜனாதிபதித் தேர்தலை எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாக பயன்படுத்தக்கூடாது.

ஏனெனில் வீழ்ந்த நாட்டை மீட்டெடுத்துவரும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற வேண்டும். உலகில் நாடொன்று வங்குரோத்தடைந்தால் மீண்டுவர 8 முதல் 10 ஆண்டுகள்வரை செல்லும். எனினும், குறுகிய காலப்பகுதிக்குள் வங்குரோத்து அடைந்த எமது நாட்டை சீரான நிலைக்கு ஜனாதிபதி கொண்டுவந்துள்ளார். மேநடுப்பகுதியளவில் நாடு வங்குரோத்து நிலையில் இருந்து முழுமையாக மீண்ட பின்னர் நிறுத்தப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள், வேலைத்திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்படும்.

தற்போது எமக்கு வேறு வழியில்லை. ஒரே வழிதான் உள்ளது. அந்த வழியை மாற்றக்கூடாது. அவ்வாறு மாற்றினால் மீண்டும் வரிசை யுகம்தான் உருவாகும்.” – என்றார்.

## ஜனாதிபதி தேர்தலில்...

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதை தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி வேட்பாளரைக் களமிறக்காவிட்டாலும், அக்கட்சி வேட்பாளர் ஒருவரை முன்நிறுத்தவுள்ளது.

அத்துடன், தொழில் முயற்சியாளரான மொபிம கட்சியின் தலைவர் திலித் ஜயவீர, பொதுமக்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்னாயக்க, முன்னாள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் ரொஷான் ரணசிங்க, ஜே.ஆர். ஜயவர்தனவின் பேரன், சம்பிக்க ரணவக்க உள்ளிட்டவர்களும் ஜனாதிபதித் தேர்தல் சமரில் களமிறங்கத் திட்டமிட்டுள்ளனர்.

## மனித உரிமைகள்...

நாட்டின் பொருளாதார நெருக்கடி வறுமைக்கோட்டுக்குக் கீழேயுள்ள மக்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கியுள்ளது.

உள்நாட்டு விசாரணை ஆணையங்கள் பொறுப்புக்கூறலை உறுதி செய்யத் தவறியதால், பாதிக்கப்பட்ட சில சமூகங்கள் இந்தத் திட்டங்களை முற்றிலுமாக நிராகரித்தன.

இந்தநிலையில், நட்டஈடுகளுக்கான அலுவலகம் மற்றும் காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம், என்பனவற்றில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை இலங்கை அரசு எட்டவில்லை

அத்துடன் மனித உரிமை மீறல்களில் தண்டனையின்மைக்கான எடுத்துக்காட்டுகளாக உள்நாட்டு நீதிமன்ற அமைப்பில் மீண்டும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லாமல் இழுத்தடிக்கப்பட்டுள்ளது என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த இலங்கை அரசு மேற்கொண்டு வரும் தொடர் முயற்சிகளையும் சர்வதேச மன்னிப்புச் சபை கடுமையாகச் சாடியுள்ளது,

கடந்த நவம்பரில் மட்டக்களப்பில் நினைவேந்தல் ஊர்வலத்துக்காக 9 தமிழர்கள் கொடூரமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சம்பவத்தை சர்வதேச மன்னிப்புச் சபை மேற்கோள்காட்டியுள்ளது.

இந்தச் சட்டத்தை இரத்துச் செய்வதாக உறுதியளித்த போதிலும், இலங்கை அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வருகின்றது.

இலங்கையின் இணையப் பாதுகாப்பு யோசனையையும், பௌத்தத்தை விமர்சித்ததற்காக சமூக விமர்சகர்கள் கைது செய்யப்பட்டதையும் சர்வதேச மன்னிப்புச் சபை விமர்சித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் போராட்டங்கள் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரால் கடுமையாக ஒடுக்கப்படுவதால், சர்வதேச சமூகம் அதன் பாதுகாப்புப் படைகளின் பயிற்சி மற்றும் ஏற்பாடுகள் உட்பட இலங்கை அரசுடனான ஒத்துழைப்பை அவசரமாக மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

# வீசாக் கட்டணத்தை அதிகரித்தால் நாட்டில் பாதக விளைவுகள் ஏற்படும்

## எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொவிட் தொற்று நோயால் ஏற்பட்ட எதிர்மறையான தாக்கத்தின் பின்னர், இலங்கையில் சுற்றுலாத் துறை மீண்டும் அபிவிருத்தியடைந்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போதைய அரசு விசா கட்டணத்தை அதிகரித்துள்ளது. முன்னேற்றம் கண்டு வரும் இந்த நாட்டின் சுற்றுலாத்துறை இதனால் மீண்டும் வீழ்ச்சியை நோக்கி நகரலாம். சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்தால், அது முழு நாட்டுக்கும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸதெரிவித்தார்.

நிலையியல் கட்டளை 27 (2) இன் கீழ் வீசா கட்டண அதிகரிப்பு குறித்து நேற்று (26) நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விசா கட்டணம் அதிகரிப்பதற்கான காரணங்கள் குறித்து கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர், சார்க் மற்றும் சார்க் அல்லாத நாடுகளுக்கு அறவிடப்படும் விசா கட்டணங்கள் குறித்தும் கேள்வி எழுப்பினார்.

முந்தைய வீசா கட்டணங்களுடன் ஒப்பிடுகையில் எத்தனை சதவீதம் மற்றும் எவ்வளவு தொகை வீசா கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பது குறித்த ஒப்பீட்டு ரீதியிலான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை ஹோட்டல் அசோசியேஷன் போன்ற இரண்டு நிறுவனங்கள் விசா கட்டண அதிகரிப்பால் ஆச்சரியமடைந்துபோயுள்ளன.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இக்கட்டணம் அதிகமாகும். வீசா கட்டணம் தொடர்பில் சுற்றுலா தொழில்துறையின் பங்குதாரர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டதா என்பதில் சிக்கல் நிலவுகிறது.

சார்க் நாடுகளுக்கு 20 முதல் 35 டொலர் வரையிலும், சார்க் அல்லாத நாடுகளுக்கு 50 முதல் 75 டொலர் வரையிலான சேவைக் கட்டணமும், மேலதிக கட்டணமும் அறவிட்டு வருகிறது. சார்க் அல்லாத நாடுகளின் விசா கட்டணம் 100 டொலர்களைத் தாண்டியுள்ளது. சார்க் நாடுகளுக்கான வீசா கட்டணம் 58 டொலர்களை தாண்டியுள்ளது. இதன் காரணமாக முன்னேற்றம் கண்டு வந்த சுற்றுலாத்துறை கூட ஸ்தம்பிதம் அடையும் நிலை ஏற்பட்டு வருகிறது.

தாய்லாந்து 30-50 டொலர்களுக்கு இடையிலும், கம்போடியா 36 டொலர்களையும், வியட்நாம் 25 டொலர்களையும், பாலி 50 டொலர்களையும், கென்யா 51 டொலர்களையும், மாலைதீவு விசா கட்டணத்தை அறவிடாத நிலையிலும் உள்ளன.

இவற்றுடன் ஒப்பிடும் போது நமது நாட்டில் வீசா கட்டண அதிகரிப்பு உயர் மட்டத்துக்குச் சென்றுள்ளது.

முன்னர் வழங்கப்பட்ட வீசா முறைக்கு அப்பால் வீசா விண்ணப்ப முறையை நாடுவதற்கான காரணங்கள் மற்றும் குடிவரவு திணைக்களம் இது தொடர்பில் கொண்டுள்ள கட்டுப்பாடு மற்றும் இதனால் தொழில் இழப்பு ஏற்படுமா என்பது தொடர்பில் சிக்கல்கள் நிலை நிலவி வருகிறது.

சுற்றுலாப் பயணிகளுக்கு தனி நபர் விசா வழங்க முடியாது என தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அறியக் கிடைக்கிறது. இதற்கு மாற்றாக வழங்கப்படும் விசாக்களை பயன்படுத்தி இந்த நாட்டுக்கு வரும் சிலர் இந்த நாட்டில் சட்டவிரோத மற்றும் மோசடியான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இத்தகையவர்கள் இணைய வழிக் கடன் திட்டங்களையும் முன்னெடுத்து வந்தனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

விசா வழங்கும் முறை மாற்றம் தொடர்பில் பல அமைச்சரவைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்ட போது இதற்கான உப குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டது.

உப குழு அறிக்கையில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளபடி, தற்போதைய கட்டமைப்பில் உள்ள மென்பொருள் வசதிகள் புதிய முறைமையில் இல்லை. ஏற்கனவே நடைமுறையில் உள்ள முறைப்படி, விண்ணப்பதாரர்களிடம் ஒரு டொலர் கட்டணம் அறவிடப்பட்டது. ஆனால் புதிய முறையின் கீழ், இது 18 டொலராக அதிகரித்துள்ளது. இது எமது நாட்டிலுள்ள சட்டத்துக்கு அமைவாகவா கொண்டு வரப்பட்டுள்ளது.- என்றார்.

# சாவகச்சேரியில் விடுதி ஒன்றில் தங்கியிருந்த ஜேர்மனி சுற்றுலாப் பயணிகளுக்கு மிரட்டல்!

## வெளியுறவு அமைச்சு மற்றும் சுற்றுலாப் பொலிஸாரிடம் முறைப்பாடு

(த.சுபேசன்)



அமைச்சர் ஒருவரின் இணைப்பாளர் என தன்னை அடையாளப் படுத்திய நபர் ஒருவர் சாவகச்சேரியில் ஜேர்மனி சுற்றுலாப் பயணிகள் தங்கியிருந்த ஹோட்டல் ஒன்றுக்குள் நுழைந்து அவர்களை மிரட்டியுள்ளார் என்று வெளியுறவு அமைச்சு மற்றும் சுற்றுலாப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் (25) வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

ஜேர்மனியைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் சிலர் உறவினர் ஒருவருடைய திருமணம் மற்றும் சமூக சேவை செயற்பாட்டில் ஈடுபடும் நோக்கில் சாவகச்சேரியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் தங்கியிருந்துள்ளனர்.

இந்த நிலையில் மேற்படி விடுதியின் பணியாளரால் கடந்த புதன் கிழமை இரவு திடீரென மின்சாரம் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் சுற்றுலாப் பயணிகள் கடும் சிரமத்தை எதிர் கொண்டுள்ளனர்.

அதற்கு மறுதினமான வியாழக் கிழமை அமைச்சர் ஒருவரின் இணைப்பாளர் எனக் கூறிக்கொண்டு, பிரதேச செயலகத்தின் சீருடையுடன் பிரதேச செயலக கடமை நேரத்தில் விடுதிக்குள் நுழைந்த நபர் சுற்றுலா பயணிகளை உடனடியாக வெளியேறுமாறு மிரட்டியுள்ளார். சுற்றுலாப் பயணிகளின் அறைகள்வரை சென்று நோட்டமும் விட்டுள்ளார்.

இதனால் அச்சமடைந்த சுற்றுலா பயணிகள் அந்த ஹோட்டலில் இருந்து வெளியேறி வேறு ஹோட்டலுக்கு செல்ல முற்பட்டுள்ளனர். இந்த வேளையில் ஹோட்டல் நிர்வாகம் ஏற்கனவே பேசிய தொகையை விட அதிக தொகையை அறவிட்டுள்ளது.

இது தொடர்பில் மன உளைச்சல்களுக்கு உள்ளான ஜேர்மனி சுற்றுலா பயணிகள், ஹோட்டல் நிர்வாகம்மற்றும்அமைச்சரின்பெயரைப்பயன்படுத்தி மிரட்டிய நபர் ஆகியோர் மீது வெளியுறவு அமைச்சகம் மற்றும் சுற்றுலா பொலிஸார் ஆகியோரிடம் முறையிட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இலங்கையின் போக்கு இது!

இலங்கையை மீண்டும் ஒரு பிடி பிடித்து இருக்கின்றது சர்வதேச மன்னிப்புச் சபை.

அது தனது உலகளாவிய வருடாந்த அறிக்கையின் ஒரு பகுதியாக இலங்கையில் இடம் பெறும் மனித உரிமை மீறல்களை விவரித்து, வரிசைப்படுத்தி, கடுமையாகச் சாடி இருக்கின்றது.

குற்றம் இழைத்தோருக்கு தண்டனை விலக்களிக்கும் முறைமை இலங்கையில் தொடர்ந்து நீடிக்கின்றது. நீதியை நிலை நிறுத்தாமை, போரினால் பாதிப்புற்றோருக்கு இழப்பீடுகள் மற்றும் நிவாரணங்களை வழங்காமை போன்ற மோசமான நிலைமை தொடர்கின்றது என்று குறிப்பிட்டு மன்னிப்புச் சபை விசனம் வெளியிட்டு இருக்கின்றது.

நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை மோசமான கட்டத்தை எட்டியுள்ளது. வறுமைக்கோட்டுக்குக் கீழ் உழலும் குடும்பங்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்து இருக்கின்றது என்பதை சுட்டிக்காட்டும் மன்னிப்புச் சபை, இந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் இலங்கை அரசாங்கம் மக்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை கட்டுப்படுத்தி அடக்கும் எதேச்சாதிகாரத்தை முனைப்புடன் செயல்படுத்துவதாக குற்றம் சுமத்துகின்றது.

நீதியை நிலை நாட்டுதல் என்ற பெயரில் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட முயற்சிகள், கட்டமைப்புகள் பாதிக்கப்பட்ட மக்களினதும் தரப்புகளினதும் நம்பிக்கையைப் பெறத் தவறியமையால் அவற்றை அத்தரப்புகள் அடியோடு நிராகரித்து விட்டன என்பதையும் மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் வெளிப்படுத்துகின்றது.

அதனால் நீதி நிலைநாட்டப்படுவதும், பொறுப்பு கூறல் உறுதிப்படுத்தப்படுவதும் முன்நகராமல் தேங்கிக் கிடக்கின்றன என்பதை மன்னிப்புச் சபை அம்பலப்படுத்தி, நினைவூட்டுகின்றது.

இழப்பீடுகளை வழங்குவதற்கான அலுவலகம், காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் என்ற பெயர்களில் சில ஆரவார ஏற்பாடுகளை இலங்கை அரசு முன்னெடுத்த போதிலும், அவை பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களை வெல்லும் விதத்தில் நம்பிக்கை தருவனவாக அமையாமல், வெறும் பேச்சளவு ஆரவாரங்களோடு அடங்கி விட்டன என்பதையும் அது அம்பலப்படுத்துகிறது.

கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் தொடர் முயற்சிகளையும் மன்னிப்புசபை கடுமையாக சாடியுள்ளது.

கடந்த நவம்பரில், கிழக்கு நகரமான மட்டக்களப்பில் நினைவேந்தல் ஊர்வலத்திற்காக சென்ற ஒன்பது தமிழர்கள் இலங்கையின் கொடூரமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சம்பவத்தை சபை, மேற்கோள்காட்டியுள்ளது.

இந்தச் சட்டத்தை இரத்துச் செய்வதாக உறுதியளித்த போதிலும், இலங்கை அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வருகிறது என்று விசனிக்கின்றது மன்னிப்புச் சபை.

இலங்கையின் இணையப் பாதுகாப்பு சட்டத்தையும், பௌத்தத்தையும் விமர்சித்தமைக்காக சமூக விமர்சகர்கள் கைது செய்யப்பட்டமையையும் மன்னிப்புசபை விமர்சித்துள்ளது.

இதேவேளை இலங்கையில் மக்களின் அமைதி வழிப் போராட்டங்கள் இராணுவம் மற்றும் பொலிஸாரால் கடுமையாக ஒடுக்கப்படுவதாகச் சுட்டும் மன்னிப்புச் சபை, அதனால் சர்வதேச சமூகம் அதன் பாதுகாப்புப் படைகளின் பயிற்சி மற்றும் ஏற்பாடுகள் உட்பட இலங்கை அரசாங்கத்துடனான ஒத்துழைப்பை அவசரமாக மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று சபை அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இடம்பெற்ற மோசமான சம்பவங்கள், குற்றங்கள், கொடூரங்கள் தொடர்பில் உள்நாட்டு பொறிமுறை மூலம் நீதியை நிலநாட்டும் எத்தனம் வெற்றி அளிக்காத நிலைமை, சர்வதேச பொறிமுறை ஒன்றே அவசியம் என்ற கட்டாயத்தை ஏற்படுத்தி நிற்பதையும் சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற கட்டமைப்புகள் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதும் அவதானத்திற்குரியதாகும்.

எனினும், இவ்விவகாரங்கள் சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற சர்வதேச நியாய மன்றங்களினால் எடுத்துரைக்கப்பட்டு வருகின்ற போரிலும், கொழும்பு தனது போக்கைத் திருத்தி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு திருப்தி தரக்கூடிய தீர்வுகளையோ நீதி நிலை நாட்டு முறைமைகளையோ ஏற்படுத்தாது என்பதுதான் காலம் காலமாக நாம் பட்டறிந்து தெளிந்து வரும் விடயமாக இருக்கிறது. இதுவே இலங்கையின் கவலைக்குரிய போக்காகும்.

# ஒலுவில் துறைமுகத்தைத் தாரைவார்க்கும் எண்ணம் எவருக்கும் வரவே வேண்டாம்!

## இந்திய தூதுவரின் வருகைக்கு எதிர்ப்பு!!



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள துறைமுகங்கள், விமான நிலையங்கள் போன்ற பாதுகாப்பு மற்றும் பொருளாதார மையங்களை அண்மைய நாடொன்றுக்கு வழங்குவதற்கு ஒருசில அரசியல் கட்சிகள் முயற்சிப்பதை தேசப்பற்றுள்ள இலங்கையர்களாக ஒன்றிணைந்து நாம் முறியடிக்க வேண்டும்.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் நமது அண்டை நாடான இந்தியாவை அண்மித்த மாகாணங்களாகும்.

எனவே, அந்த மாகாணங்களில் இத்தகைய பாதுகாப்பு மற்றும் பொருளாதார மையங்களை அபிவிருத்தி செய்ய அல்லது பராமரிக்க போகின்றோம் என்ற தோரணையில் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு நாம் ஒத்துழைப்பது புத்திசாலித்தனம் அல்ல. அது இலங்கையின் இறையாண்மைக்கு ஆபத்தாகும்.

கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ.கலிலூர் ரஹ்மான் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஒலுவில் துறைமுகத்தால் அண்மைய பிரதேசங்கள் கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டு துறைமுகமும் ஒழுங்காக இயங்க முடியாமல் உள்ளது. இந்தச் சூழ்நிலையை சீரமைக்க இலங்கை அரசும் கிழக்கு மாகாண ஆளுநரும் அலட்சியப் போக்கில் உள்ளனர். இதனைக் காரணமாக வைத்து அந்த துறைமுகத்தை சீரமைக்கும் நோக்கில் இந்திய தூதுவர் கிழக்குக்கு விஜயம் செய்து குறித்த துறைமுகம் தொடர்பில் ஆய்வு நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

எதிர்காலத்தில் இந்தத் துறைமுகத்தை அண்டை நாடான இந்தியாவுக்குக் கொடுப்பதற்காக ஒலுவில்



கடலை அழிக்க பொறுப்பான அதிகாரிகள் குழு எவரேனும் சதி செய்கிறார்களா? என்பதை அரசு பரிசீலித்து, இந்தத் துறைமுகத்தை இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் எடுத்து, அபிவிருத்தி செய்ய வேண்டும். அதனை முதலீட்டு திட்டங்களுக்குத் திறந்து, அங்கு வாழும் மக்களுக்கு ஆபத்துக்களோ நாட்டின் இறையாண்மைக்கு பங்கமோ வந்துவிடாத வகையில் பாரபட்சமில்லாது வெளிநாட்டுத் திட்டத்துக்குக் கையளிப்பதில் முஸ்லிம் சமூக அரசியல் இயக்கம் என்ற வகையில் எமக்கு ஆட்சேபனை இல்லை.

வடக்குக் கிழக்கில் அண்டை நாடான இந்தியாவுக்கு நிறைவான சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், நாட்டின் வடக்கு மற்றும் மலையக பிரதேசங்களிலும் இந்தியாவுக்கு வழங்கப்படும் பெரும் மரியாதை போதுமானது. இந்தியாவை மேலும் கௌரவிக்க வேண்டும் என்றால், புவியியல் ரீதியாக இலங்கையின் கிழக்கில் கொடுக்காமல் தெற்கு, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் கொடுப்பது நல்லது என்பது எங்களின் கருத்தாக உள்ளது.

எமது இலங்கை மண்ணுக்குள் இந்திய அமைதிப் படை நுழைந்து செய்த அநியாயங்கள், பலாத்காரமாக திணித்த மாகாண சபை முறையான வெள்ளை யானையால் இந்தியாவைக் கண்டு நாம் மிகவும் பயப்படுகிறோம். இலங்கை உள்நாட்டு போரின் போது இந்தியா கடைபிடித்த ராஜதந்திர விடயங்கள், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதியின் அறிக்கையின் அடிப்படையில் பயன்படுத்தப்பட்ட கருத்துக்கள் இந்தியா தொடர்பில் எங்களுக்கு மேலும் அச்சத்தைக் கொடுத்துள்ளது. அதனல் தான் இந்த நிலைப்பாட்டுக்கு நாங்கள் வரவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

நாங்கள் கடந்த காலங்களில் பாரத தேசமான இந்தியாவை நேசித்தோம். நாங்கள் முகலாயப் பேரரசை ஏற்றுக் கொண்டோம்.

எனினும், தற்போதைய இந்திய ஜனாதிபதி நரேந்திர மோடி மற்றும் அவரது குழுவினர் நாட்டின் சிறுபான்மை சமூகத்தின் மீது காட்டும் அக்கறையாலும், தற்போதைய தேர்தல் காலத்தில் முஸ்லிம் சமூகத்தை அவமானப்படுத்தும் வகையில் பேசியதாலும், முஸ்லிம் சமூகம் வாழும் கிழக்கு மாகாணத்தில் இந்திய பிரவேசத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

எனவே முஸ்லிம் சமூகத்தை அவமரியாதை செய்யும் ஒரு நாட்டின் அரச தலைவருக்கு எதிராக அறிக்கை விடாமல் பயந்து அவர்களுக்கு அடிபணிந்து இருக்கும் அரசியல்வாதிகள் அந்த நாட்டின் தூதுவரை கிழக்கு மாகாணத்திற்கு அழைக்க வேண்டாம்.

கிழக்கு மாகாணத்தில் அரசியல் செய்யும் அரசியல் கட்சிகளுக்கும் அதன் தலைவர்களுக்கும் இதனைக் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

கிழக்கின் உரிமைகள், சொத்துக்கள், இருப்புக்கள், பாதுகாப்பு தொடர்பில் கிழக்கு மாகாணத்தின் மத, அரசியல் மற்றும் சிவில் அமைப்புக்களின் தலைவர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். இவ்வாறான காட்டிக்கொடுப்புக்களுக்கு எதிராக எழுந்து நின்று குரல் கொடுக்குமாறும் கேட்டுக கொள்கின்றேன்.– என்றுள்ளது.

# காணாமலாக்கப்பட்டோர் பற்றிய அலுவலக விசாரணை மட்டுவில்!






**(பழுவூரான்)**

காணாமலாக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்தால் நேற்று வெள்ளிக்கிழமை (26) மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மண்முனை வடக்கு மற்றும் வாழைச்சேனை ஆகிய பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 34 காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது கொழும்பிலிருந்து வருகை தந்த காணாமலாக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள் நேரில் வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பிலும், அவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடுகள் வழங்குவது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






# கற்பிட்டி அல் அக்ஸா பாடசாலைக்கு ஒலி அமைப்பு, திரைச்சீலை கையளிப்பு

**(கற்பிட்டி சியாஜ் )**

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் நீண்ட நாள் தேவையாக காணப்பட்ட பிரதான கூட்ட மண்டபத்துக்கான ஒலி அமைப்பு மற்றும் மேடையின் பின்னணி திரைச்சீலை என்பன பாடசாலையின் பழைய மாணவர்களான 2000 சாதாரண தர மாணவர்களால் வழங்கப்பட்டுள்ளன.

கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் பிரதி அதிபர்களான எம்.என்.எம். நஸ்றீன் மற்றும் எஸ்.எப் சாஜினாஸ் தலைமையில் நடைபெற்ற உபகரணங்கள் மற்றும் திரைச்சீலை கையளிக்கும் வைபவத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் பாடசாலையின் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

2000 சாதாரண தர மாணவர்களுக்கு பாராட்டுக்களையும் நன்றிகள், பிரதி அதிபர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்பன சார்பாக தெரிவிக்கப்பட்டன.

# மாற்றுத் திறனாளிகளது பொடுப்பனவு உரிய காலங்களில் கிடைக்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு

சனத்தொகை கணக்கெடுப்பின் பிரகாரம், இந்த நாட்டில் 17 லட்சம் மாற்றுத் திறனாளிகள் இருக்கின்றனர். இவர்களினது உரிமைகளை தொடர்பில் பல முறை கேள்வியுள்ளேன்.

இவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை கொடுப்பனவு 5000 ரூபாவில் இருந்து 7500 ரூபாவரை அதிகரிக் கப்பட்டாலும், அவை குறித்த திகதிகளில் கிடைப்பதாக இல்லை என தெரிவிக் கப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகள் சமூகத்தை இவ்வாறான சிரமங்களுக்கு உள் ளாக்காமல் இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ நேற்று (26) நாடாளுமன்றத் தில் பிரதமரிடம் இவ்வாறு கோரிக்கை



விடுத்தார்.

பொது நிர்வாக சுற்றறிக்கை 1988 – 27 இன் பிரகாரம், அரச நிறுவனங் களில் வேலை வாய்ப்பை வழங்கும் போது மாற்றுத் திறனாளுக்கு 3 வீதம் வேலை வாய்ப்பை வழங்க வேண்டும். அது இன்றுவரை நடைமுறைப்படுத் தப்படவில்லை. மாற்றுத் திறனாளிக ளின் உரிமைகள் குறித்து புதிய சட்ட மூலம் கொண்டு வரப்படும் என்று கூறப்பட்டாலும் இதுவரை அது கொண்டு வரப்படவில்லை. இந்தப் புதிய சட்டமூலம் சமர்ப்பிக்கப்படாமைக்கான காரணங்கள் யாது என்று எதிர்க்கட்சித் தலைவர் இங்கு கேள்வி எழுப்பினார்.

சைகை மொழிச் சட்டத்தை நாடா ளுமன்றத்தில் கொண்டு வந்து அதை நாட்டின் சட்டமாக மாற்றுங்கள். பொது இடங்களில் மாற்றுத் திறனாளிகள் பிர வேச அணுகல் விடயத்தில் பிரச்சினை களை சந்தித்து வருகின்றனர். மாற் றுத்திறனாளிகள் பயன்படுத்தும் உபகரணங்களுக்கு வற் வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டாலும், சந்தை யில் தட்டுப்பாடு நிலவுகிறது. அவற் றுக்கான தீர்வுகளை வழங்குங்கள். அதுமட்டுமல்லாமல் இவர்களின் காப் புறுதி குறித்து அவதானம் செலுத்த வேண்டும் என்றும் மேலும் தெரிவித்தார்.

# குப்பிழான் ஐ. சண்முகனின் நினைவாக நூல்கள் வெளியீடு!




( ஐங்கரன் விக்கினேஸ்வரா)

மறைந்த எழுத்தாளர் குப்பிழான் ஐ சண்முகனின் முதலாவது ஆண்டு நினைவாக நாளை (28) ஞாயிற்றுக் கிழமை இரு நூல்கள் வெளியிடப் படவுள்ளன.

குப்பிழான் ஐ. சண்முகனின் ரச னைக் குறிப்புகள் மற்றும் குப்பிழான் ஐ. சண்முகனின் சிறுகதைகள் ஆகிய இரண்டு நூல்களும் இவ்வாறு வெளி யிடப்படவுள்ளன.

அவரது பிறந்த ஊரான குப்பிழானில் உள்ள சிவபூமி இல்லத்தில் நாளை காலை 9.30 மணிக்கு வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது .

இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொள்ளுமாறு நூல் வெளியீட்டுக் குழு வினர் கேட்டுள்ளனர்.

சாந்தமும் அமைதியும் அகத்தின் உள்ளேயும், கூர்மையான விழிகளால் ஈழத்து இலக்கியத்தை யாசித்த மூத்த எழுத்தாளர் குப்பிழான் ஐ. சண்முக னின் முதலாவது ஆண்டு நினைவு தினம் ஏப்ரல் 24 ஆகும்.

வடமராட்சியில் திருமணமணமாகி வாழ்ந்த போதும் தனது பிறந்த ஊர் குப்பிழான் எனும் அடையாளத்தைத் தனது பெயருடன் அடையாளமாகத் தொடர்ந்து இட்டவர்.

ஒகஸ்ட் முதலாம் நாள் 1946 இல் சுன்னாகத்தில் பிறந்த குப்பிழான் ஐ. சண்முகன், பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலைப்பட்டம் பெற்ற ஓர் ஆசி ரியர் ஆவார். சிறுகதை, கவிதை, திற னாய்வு, ஆன்மீகம் எனப் பல துறை களில் எழுதிய குப்பிழான் ஐ. சண் முகன் அலையின் ஆரம்ப ஆசிரியர் குழுவில் இடம்பெற்றவர்.

குப்பிழான் ஐ. சண்முகன் முதலா வது சிறுகதை “பசி” ராதா என்ற வார இதழில் வெளிவந்தது. தொடர்ந்து பல ஆக்கங்கள் பல்வேறு இதழ்களிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்தன. 1975 இல் வெளியான இவரது முதலாவது சிறுகதைத் தொகுப்பு “கோடுகளும் கோலங்களும்” சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றது.

இவரது நூல்களில் கோடுகளும் கோலங்களும் சிறுகதை தொகுதி – 1975 வெளியானது. அதன் பின்னர் சாதாரணங்களும் அசாதாரணங்க ளும் எனும் சிறுகதைகளின் நூல் 1983 வெளியானது. அத்துடன் அறிமுகங்கள் விமர்சனங்கள் குறிப்புக்களின் நூல் 2003 இலும், ‘உதிரிகளும்’ சிறுகதை தொகுப்பு 2006 இலும் வெளியானது.

யாழ். இலக்கியக் கழகம் என்ற அமைப்பின் மூலமும், அதன் பின்னர் ஐ. சாந்தன், அ. யேசுராசா போன்றோரோடு சேர்ந்து “கொழும்பு இலக்கியக் கழகம்” மூலமும் இலக்கியச் செயற்பாடுகளில் ஈடுபட்ட குப்பிழான் ஐ. சண்முகனின் ‘ஒரு பாதையின் கதை’ சிறுகதைகள் நூல் 2012 இல் வெளியானது.

1976 இல் சாகித்திய மண்டலப் பரிசை ‘கோடுகளும் கோலங்களும்’ எனும் சிறுகதைத் தொகுப்புக்காக பெற்ற குப்பிழான் ஐ. சண்முகம் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் சங்கத்தின் “சங்கச் சான்றோர் பட்டம்” விருதையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

குப்பிழான் மண்ணின் தனிப் பெரும் அடையாளமாகவும், சிறுகதை உள்ளிட்ட பல்துறை ஆளுமையாள ராகவும், அனுபவப் பெட்டகமாகவும் திகழ்ந்த பிரபல எழுத்தாளர் குப்பிழான் ஐ.சண்முகன் மரணம் கடந்தும் அவர் பெயர் எல்லோர் நெஞ்சங்களிலும் நிலைக்கும் என்பது உறுதியாகும்.


ஈழத்தின் தலைசிறந்த மூத்த எழுத் தாளர் குப்பிழான் ஐ. சண்முகனுக்கு அஞ்சலிகளுடன், அவரது நூல்கள் எதிர்கால சந்ததியினரும் வாசித்து பயன்பெற இலத்திரனியல் மூலமாக ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்பதே பலரதும் ஆவலாகும்.

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

GUNAAM'S SUPER MARKET

## Super Deal of this Week

### till April 28th




LOWEST PRICE 8 LB 7.99 $ Only at GUNAAM'S SUPER MARKET

LOWEST PRICE LB 1.99$ Only at GUNAAM'S SUPER MARKET




EggPlant





LOWEST PRICE 11.99$ Only at GUNAAM'S SUPER MARKET

LOWEST PRICE 7.99$ Only at GUNAAM'S SUPER MARKET



ஊர் கோழி

LOWEST PRICE LB 3.99$ Only at GUNAAM'S SUPER MARKET



இறால்

LOWEST PRICE LB 8.99$ Only at GUNAAM'S SUPER MARKET



விளைமீன்

**Gunaam's super market இந்த வாரம் அள்ளித்தரும் super deal அனைத்து பலசரக்குப் பொருட்கள் தாயகத்து பழவகைகள், மீன், இறைச்சி, மரக்கறி வகைகள் மிக மிக குறைந்த விலையில்..**

| | |
|---|---|
| Harishchandra pappadam 5 for | -$5.00 |
| 200g Tamarind 5 for | -$5.00 |
| Kottu Mee noodles 5 for | -$5.00 |
| Joy pappadam 5 for | -$5.00 |
| Maggi coconut milk powder | -$3.99 |
| Grace coconut milk powder | -$3.99 |
| MR.Goudas coconut milk powder | -$3.99 |
| 800g maggi coconut milk powder | -$12.99 |
| Niru tin fish 3 for | -$10.00 |
| Waadiya tin fish 3 for | -$10.00 |
| Delm tin fish 3 for | -$10.00 |
| Aroy-D coconut milk tin 3 for | - $10.00 |
| Piriya basmati rice | -$7.99 |
| Grace basmati rice | -$9.99 |
| Tusk brand basmati rice | -$9.99 |
| Ceycan கைக்குத்தரிசி | -$8.99 |
| வேசைர அவித்த மா | -$8.99 |
| Maharaja curry powder | -$11.99 |
| 3Lt MR.Goudas sunflower oil | -$8.99 |
| 4lb Mysoor dall | -$3.99 |
| Tip tip 6 for | -$10.00 |
| Baba payasam mix | -$2.99 |

| | |
|---|---|
| Narasu's coffee | -$4.99 |
| Baba uppuma mix | -$2.99 |
| Uruthira நாட்டு சர்க்கரை | -$3.99 |
| Maharaja rice flour | -$8.99 |
| Super deal Mr.Goudas 3lt sunflower oil | -$8.99 |
| கத்தரிக்காய் | -$1.99 lb |
| Drumstick | - $5.99 lb |
| சின்ன வெங்காயம் | -$5.99 lb |
| கருணைக்கிழங்கு | -$4.99 lb |
| யாழ்ப்பாணத்து ராசவள்ளி | -$3.99 lb |
| Roma tomato | -$1.99 lb |
| விளைமீன் | -$8.99 lb |
| கருக்கனிப்பாரை | -$8.99 lb |
| ஓரா fish | -$7.99 lb |
| சுராப்பாரை | -$7.99 lb |
| நெத்தலி | -$7.99 lb |
| பால்சுறா | -$6.99 lb |
| இறால் | -$3.99 lb |
| திருக்கை | -$5.99 lb |
| ஊர்க் கோழி | -$7.99 |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998




**ஆர்மேனிய இன அழிப்பை அங்கீகரித்த சர்வதேசம்!**

# ஈழத்தமிழர் இனப்படுகொலையை ஏற்க மறுப்பது ஏன்?

**(ஆர்மேனிய மக்கள் மீது நடந்தேறிய இனஅழிப்பின் நினைவு நிகழ்வுகள் உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 24 ஆம் நாளன்று நடத்தப்பட்டு வருகின்றன)**

**- நவீனன் -**

## ஆர்மேனிய இன அழிப்பு

ஆர்மேனிய இன அழிப்புக்கும் ஈழத்தில் இறுதியாக நிகழ்த்தப்பட்ட முள்ளிவாய்க்கால் இன அழிப்புக்கும் இடையில் பல ஒற்றுமைகள் உள்ளன. இரண்டும் இன அடிப்படையிலான குரோதம் முக்கிய பங்கு வகித்துள்ளமை தெட்டத் தெளிவாக தெரிகிறது.

ஆர்மேனிய இனஅழிப்பைப் பின்னோக்கிப் பார்க்கின்றபோது, 1915 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் நாளன்று ஒட்டோமன் துருக்கியர்கள், ஆர்மேனிய மக்களை சுற்றி வளைத்துக் மேற்கொள்ளப்பட்ட படுகொலையோடு தொடங்கிய இன அழிப்பு, ஒட்டு மொத்தமாகப் 15 லட்சம் ஆர்மேனிய மக்களைக் கொன்று குவித்த, இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் இனப்படுகொலையாக நடந்தேறிய ஓர் வரலாற்றுக் கொடூரமாகும்.

ஆர்மேனியாவிலும், ஈழத்தில் தமிழர் மீதான இனப்படுகொலைகள் திட்டமிட்டே நிகழ்த்தப்பட்டன என்பதற்கு பல சான்றுகள் உள்ளன.

நூறு ஆண்டுகளுக்கு மேல் கடந்து விட்ட பின்னரும், இற்றைவரை துருக்கி இந்த கொடூர பாதக செயலுக்கு பொறுப்புக் கூறவில்லை. அத்துடன் அதனை ஏற்றுக் கொள்ளவும் இல்லை என்பதே மிகவும் கண்டனத்துக்கு உரியதாகும்.

ஆர்மேனிய இனஅழிப்புக்கும் ஈழத்தில் நிகழ்த்தப்

தொடர்ச்சி▼



# ஈழத்தமிழர் இனப்படுகொலையை ஏற்க மறுப்பது ஏன்?

தொடர்ச்சி▲

பட்ட முள்ளிவாய்க்கால் இன அழிப்புக்கும் இடையில் பல ஒற்றுமைகள் உள்ளன. இந்த இரு நிகழ்வுகளிலும் இன அடிப்படையிலான எழுந்த குரோதம் முக்கிய பங்கு வகித்துள்ளது.

### கூட்டுத் தண்டனை இனஅழிப்பு?

இக் கோரமிகு குற்றங்களை புரிந்தவர்கள், போரினால்தான் இக்கொலைகள் இடம்பெற்றன எனக் கூறித் தப்பித்துக்கொள்ளப் பார்க்கின்றார்கள். அத்துடன், பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் இவை தவிர்க்க முடியாதவை எனக் கூறி நியாயப் படுத்தவும் முயல்கின்றார்கள்.

இரு தேசத்திலும் இனஅழிப்பானது கூட்டுத் தண்டனையாகப் பாரிய அளவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆர்மேனிய மக்களுக்கு துருக்கியர்களால் இழைக்கப்பட்டது இனஅழிப்பு என்பதை இன்று உலகில் 20 நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

ஆயினும் ஒட்டோமான் பேரரசின் பின்னர் ஆட்சிக்கு வந்த துருக்கிக் குடியரசு இந்நிகழ்வை இனப்படுகொலை எனக் கூறுவதை மறுத்து வருகிறது.

அண்மைக் காலத்தில், இந்த இனப்படுகொலைகளை அங்கீகரிக்கப் பல நாடுகளும் அமைப்புகளும் துருக்கியைக் கோரி வருகின்றன. இது வரையில் 20 நாடுகள் இக்காலப்பகுதியில் இடம்பெற்ற படுகொலைகள் இனப்படுகொலைகளே என அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளன.

இருபதாம் நூற்றாண்டில் நடந்த இனப் படுகொலையை அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் 29 அக்டோபர் 2019 அன்று ஏற்றுக்கொண்டது.

துருக்கியின் பேரரசு தன் படைபலத்தால் ஆர்மேனிய மக்களைக் கொன்றது இனப்படுகொலையே என்று பல நாடுகள் தீர்மானம் நிறைவேற்றினாலும், துருக்கி அரசு ஆர்மேனிய இனப்படுகொலைக்கு எச்சான்றும் இல்லை என மறுத்துள்ளது.

ஆர்மேனியாவில் நிகழ்ந்தது இனப் படுகொலை என்பதை ஏற்றுக் கொள்ளுமாறு துருக்கி நாட்டைக் கோரும் தீர்மானம் ஒன்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.


### ஈழத்தமிழர் இனப்படுகொலை

2009 போர் முடிவின் பின்னர் இலங்கையில் தமிழினத்தின் மீது நடபெற்றது இனஅழிப்பு அல்ல என்பதை நிலைநாட்ட சில சர்வதேச சக்திகள் முனைந்து வருகின்றன.

ஆயினும் உலகத் தமிழ் மக்கள் ஈழத்தில் நடந்தது இனஅழிப்பே என்பதில் உறுதியாக உள்ளனர். தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்கு உலக நாடுகள் செயலாற்ற வேண்டும்.

### புலம்பெயர் ஆர்மேனிய மக்கள் சக்தி

ஆர்மேனியாவில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் புலம்பெயர் மக்களின் மன உறுதியினாலும் இடைவிடா முனைப்புக்களாலும் இன்று அவர்களிடத்தில் பல நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், ஆலோசனைக் கூடங்கள், ஊடகங்கள் எனப பலவும்




இயங்கி வருகின்றன.

கொடூரமான இனவழிப்பின் பின் ஆர்மேனிய மக்களை உலகெங்கும் புலம்பெயர வைத்தது.

புலம்பெயர்ந்த ஆர்மேனிய மக்கள், உலகில் பலம் வாய்ந்த புலம்பெயர்ந்த சமூகக் கட்டமைப்புகளில் முக்கியமான தரப்பாகும்.

அவர்கள் தனித்து உணர்வு ரீதியான செயற்பாடுகளுடன் மட்டும் தமது நடவடிக்கைகளை மட்டுப் படுத்தவில்லை.

### சோவியத்தில்ஆர்மேனிய தேச உருவாக்கம்

சோவியத் ஒன்றிய காலத்திலேயே ஆர்மேனிய தேச உருவாக்கத்தில் சொந்த நிகழ்ச்சி நிரலில் நேர்த்தியான நிர்வாக முகாமைத்துவத்தோடு தமக்குரிய செயற்றிட்டங்களை முன்னெடுத்து வந்தார்கள்.

சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட பின்னர் ஆர்மேனியா தன் சுயநிர்ணய உரிமையை முழுமையாக அடைந்துள்ளது. ஆயினும் ஆர்மேனிய மக்கள் துருக்கியால் நிகழ்த்தப்பட்ட இக்கொடிய அநீதி இனி ஒரு போதும் நடைபெறாமல் தடுப்பதற்கும் வழி வகுத்து, தமது உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர்.

புனித பாப்பரசர் பிரான்சிஸ் கூறியது போல "ஒரு கொடுமையை மறைப்பது அல்லது மறுப்பது என்பது, காயம் ஒன்றிலிருந்து இரத்தம் ஓடுவதைத் தடுப்பதற்கு கட்டுப்போடாமல் இருப்பதை ஒத்தது" என்ற கூற்று ஆர்மேனிய மக்களுக்கும் ஈழத்தமிழர்க்கும் மிகவும் பொருத்தமாகும்.

இன்றைய உலகில் பல நாடுகள் ஆர்மேனிய இனஅழிப்பை அங்கீகரித்துள்ளன. ஆயினும் சர்வதேசம் ஈழத்தமிழர் இனப்படுகொலையை ஏற்க மறுப்பது ஏன் என்பது தமிழ் மக்களை மாற்றான் தாய் மனப்பாங்குடன் புறக்கணிப்பது போல தென்படுகிறது.

# அர்ப்பணிப்புமிக்க பணியாளர்களுக்கு கல்முனையில் சேவை நலன் பாராட்டு







**(நூருல் ஹுதா உமர், எஸ்.அஷ்ரப்கான்)**

கல்முனைப் பிராந்தியத்தில் அதிக போஷாக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை கண்காணித்து அவர்களின் சுகாதார மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் பாராட்டிப் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

சர்வதேச தொண்டு நிறுவனம் ஒன்று கல்முனைப் பிராந்தியத்தில் போஷாக்கு குறைபாட்டால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு உதவும் பொருட்டு கடந்த 06 மாதங்களாக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தது.

கல்முனை பிராந்தியத்தில் உள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் முன்னெடுக்கப்பட்ட குறித்த வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்குப் பொதுச் சுகாதார தாதிய உத்தியோகத்தர்கள், மேற்பார்வை பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள், பொதுச்சுகாதார மருத்துவ மாதுக்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றினர்.

இந்த உத்தியோகத்தர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் பொருட்டு பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு ஏற்பாடு செய்த சேவை நலன் பாராட்டு விழா புதன்கிழமை (24) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.றிஸ்பினால் ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட இந்த நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.சீ.எம். பசால், கல்முனை வடக்கு, கல்முனை தெற்கு, சம்மாந்துறை, சாய்ந்தமருது, காரைதீவு, நாவிதன்வெளி, நிந்தவூர் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகள், ஊநுசுஜ முனைளநிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் கடமையாற்றும் பொதுச் சுகாதார தாதிய உத்தியோகத்தர்கள், மேற்பார்வை பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் இதன் போது பாராட்டி, பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

பெண்களுக்கான நலன் கிளினிக்கில் மிகத் திறமையாகச் செயல்பட்டு முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட நாவிதன்வெளி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கும் இந்த நிகழ்வின்போது விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

# நாளை சிட்னியில் சித்திரைப் பெருவிழா

**(வி.ரி. சகாதேவராஜா)**

காரைதீவு ஆஸ்திரேலியா மக்கள் ஒன்றியம் நடத்தும் சித்திரைத் திருநாள் பெருவிழா நாளை (28) ஞாயிற்றுக்கிழமை சிட்னி லிட்டன் ஸ்ட்ரீட் பார்க் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஒஸ்கார் அமைப்பின் தலைவர் கந்தசாமி பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆஸ்திரேலியாவில் வாழும் காரைதீவு மக்கள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

அந்த நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன என்று அதன் செயலாளர் திருச்செல்வம் லாவண்யன் தெரிவித்தார்.



# மட்டக்களப்பு திறந்த பல்கலையில் பண்டிகைக் காலத்து நிகழ்வுகள்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு திறந்த பல்கலைக் கழகத்தில் தமிழ் சிங்களச் சித்திரைப் புத்தாண்டு மற்றும் ரமழான் பண்டிகையை முன்னிட்டு கலாசார விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.

திறந்த பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்புப் பிராந்திய சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் ஏ.டி. கமலநாதனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக மட்டக்களபப்பு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சரணியா ரவிக்குமாரும், கௌரவ அதிதியாக எந்திரி வினோராஜும், சிறப்பு அதிதிகளாக ஜூடி மதுசிகா மற்றும் வைத்தியர் கோகிலநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது தமிழர் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளும், மேடை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

அத்தோடு போட்டிகளில் வெற்றியீட்டியோருக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டன.





# புது வருடக் கொண்டாட்டம் கம்பஹா மாநகர சபையில்




கம்பஹா லக் சியனே மகா புது வருட கொண்டாட்டம் கம்பஹா மாநகர சபை மைதானத்தில் நாளை (28) நாள் முழுவதும் நடைபெற உள்ளது.

அன்றைய தினம் திறந்த ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பந்தய சைக்கிள் போட்டியும் நடைபெறவுள்ளது. ரஞ்சன் லங்கா நிறுவனம் முன்பாக காலை 6.30 மணிக்கு சைக்கிள் ஓட்டம் ஆரம்பமாகவுள்ளது.

முதல் பரிசாக ஒரு லட்சம் ரூபாவும், இரண்டாம் பரிசாக எழுபத்தைந் தாயிரம் ரூபாவும், மூன்றாம் பரிசாக ஐம்பதாயிரம் ரூபாவும் வழங்கப் படவுள்ளன. பத்தாம் இடம்வரை தலா இருபத்தைந்தாயிரம் ரூபா வழங்க ஏற்பாட்டுக் குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

அழகு ராணி தெரிவு, சிகிதி புது வருட இளவரசர் மற்றும் இளவரசி தெரிவு, மரதன் ஓட்டப் போட்டி, கயிறு இழுத்தல், வழுக்கு மரம், தலையணை சண்டை என பல போட்டிகள் நடைபெறவுள்ளன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் கருத்தின் பிரகாரம் கம்பஹா பிரதேச செயலகம், கம்பஹா பிரதேச சபை, கம்பஹா பிரதேச அரச நிறுவனங்கள் மற்றும் கம்பஹா தலைமையக பொலிஸார் இதனை ஏற்பாடு செய்துள்ளனர்.

அன்றிரவு நாடளாவிய ரீதியில் பிரபல பாடகர்கள் பலர் கலந்து இசை இரவு நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தேசிய கணித ஒலிம்பியாட் போட்டி; மல்வத்தை மாணவிகள் தெரிவு!

**( வி.ரி. சகாதேவராஜா)**

சம்மாந்துறை கல்வி வலயத்தில் இருந்து இந்த முறை தேசிய மட்ட ஒலிம் பியாட் (கணிதம் ) போட்டிக்கு இரு மாணவிகள் தெரிவாகியுள்ளனர் என்று கணித பாட உதவிக் கல்விப் பணிப்பா ளர் எம். எம். எம். ஜெளபர் தெரிவித் தார்.

மல்வத்தை விபுலானந்தா மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சிவ ரூபன் ஜினோதிகா மற்றும் ரி.மதுஸ்கா ஆகிய மாணவிகள் தெரிவாகியுள்ள னர்.

பாடசாலையின் அதிபர் திருமதி கௌசல்யா ஞானேஸ்வரன் தலைமை யில் பாடசாலை காலை ஒன்று கூடலில் இந்த மாணவிகள் பாராட்டிக் கௌரவிக் கப்பட்டனர்.

கிழக்கில் மல்வத்தை திருவள்ளுவர் புரத்தைச் சேர்ந்த சிவரூபன் ஜினோ திகா என்ற மாணவி கணிதம் மற்றும் விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டிகளில் தொடர்ச்சியாக சாதனை படைத்து வரு வது குறிப்பிடத்தக்கது.

# ஆற்றை வழிமறித்து விவசாயம்; திரியாய் விவசாயிகள் நடவடிக்கை!

**(எஸ்.கீதபொன்கலன்)**

குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட திரியாய் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் ஒன்றிணைந்து, யான் ஓயாவின் கிளை ஆற்றை மறித்து, விவசாயம் மேற்கொள்வ தற்கான முயற்சியில் ஈடுபட்டு வெற்றி யடைந்துள்ளனர்.

இதற்காக ஆயிரத்துக்கும் மேற்பட்ட மண் மூடைகளை 15 அடி உயரத்துக்கு அடுக்கி ஆற்றை வழிமறித்து நீரை வயல்வெளிக்கு திருப்பியுள்ளார்கள்.

இதன்மூலம் 300 தொடக்கம் 350 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்ளவும் திட்டமிட்டுள்ளனர்.

கடந்த வருடம் 150 ஏக்கரில் விவசாயத்தை மேற்கொண்டிருந் தார்கள்.

அரசு இவர்களுக்கான நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.






# பஸ்ஸில் கடத்தப்பட்ட 95 குழந்தைகள் மீட்பு

## அயோத்தி செல்லும் வழியில் நடந்தது

லக்னோ,ஏப்.27

பீகார் மாநிலம் ஆராரியா பகுதியிலிருந்து உத்தரபிரதேச மாநிலத்திற்கு பஸ் ஒன்றில் 95 குழந்தைகள் கடத்தி செல்லப்படுவகின்றன எனக் குழந்தைகள் நல ஆணையத்திற்கு தகவல் கிடைத்தது. அதில் அவர்கள் கோரக்பூரில் இருக்கின்றனர் எனவும், அயோத்தி வழியாக செல்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து அயோத்தி செல்லும் வழியில் சோதனை நடத்திய குழந்தைகள் நல ஆணைய அதிகாரிகள் மற்றும் பொலிஸார் பஸ்ஸில் வந்த 95 குழந்தைகளை மீட்டனர். மீட்கப்பட்ட குழந்தைகளுக்கு உணவு மற்றும் மருத்துவ உதவி அளிக்கப்பட்டது.

இது குறித்து அயோத்தி குழந்தைகள் நலக்குழுவின் தலைவர் சர்வேஷ் அவஸ்தி கூறியவை வருமாறு:-

"பீகாரில் இருந்து உத்தரபிரதேசத்திற்கு குழந்தைகள் கடத்தப்படுகின்றன எனத் தகவல் கிடைத்தது. இதையடுத்து அந்த பஸ்ஸைச் சோதனை செய்து 95 குழந்தைகள் மீட்கப்பட்டனர். அவர்களுக்கு உணவு மற்றும் மருத்துவ உதவிகள் அளிக்கப்பட்டது.

மீட்கப்பட்டுள்ள குழந்தைகள் அனைவரும் 4 முதல் 12 வயதுக்கு உட்பட்டவர்கள்.

"குழந்தைகளை அழைத்து வந்தவர்களிடம் பெற்றோரிடம் இருந்து எந்தவொரு ஒப்புதல் கடிதமும் இல்லை. பெற்றோரின் ஒப்புதலின்றி 95 குழந்தைகள் எதற்காக பஸ்ஸில் அழைத்து செல்லப்பட்டனர் என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். அந்த சிறுவர்களின் பெற்றோர்களை தொடர்பு கொண்டுள்ள பொலிஸார், அவர்களிடம் சிறுவர்களை ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்." - என்றார்.

# பாடசாலை பஸ் கவிழ்ந்ததில் 15 மாணவர்களுக்குக் காயம்

## ராஞ்சியில் இன்று காலை சம்பவம்



ராஞ்சி,ஏப்.27

ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சி மாவட்டத்தின் மந்தர் கிராமத்தில் ஒரு தனியார் பள்ளி இயங்கி வருகிறது. இந்த பள்ளியின் பஸ் வழக்கம்போல இன்று காலை 30 மாணவர்களை ஏற்றி சென்று கொண்டிருந்தது. அப்போது பள்ளியிலிருந்து 100 மீட்டர் தொலைவில் உள்ள ஒரு திருப்பத்தில் பஸ் திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் பஸ்ஸில் இருந்த 15 மாணவர்கள் காயமடைந்தனர். இதையடுத்து அக்கம் பக்கத்தில் இருந்த மக்கள் மாணவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர் என்று மந்தர் போலீஸ் நிலையத்தின் பொறுப்பாளர் ராகுல் தெரிவித்தார்.

மேலும் இந்த விபத்தில் மாணவர்களில் ஒருவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது. இதனால் அந்த மாணவனுக்கு சி.டி. ஸ்கேன் செய்யப்பட்டது. மற்றப்படி அனைத்து மாணவர்களும் நலமாக உள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். இந்த விபத்துக்கான சரியான காரணத்தை கண்டறிய விசாரணை நடைபெற்று வருகிறது என்று அவர் தெரிவித்துள்ளார்.



# ஈகுவேடாரில் இராணுவ ஹெலி விழுந்த விபத்தில் எண்மர் பலி!

**குவிட்டோ,ஏப்.27**

ஈகுவேடார் நாட்டின் பாஸ்தஜா மாகாணத்தின் டிவினோ மாவட்டத்தில் வெள்ளப் பாதிப்பு நிவாரணப் பணியில் ஈடுபட்டிருந்த ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்று விழுந்து விபத்துக்குள்ளானதில் எண்மர் பலியாகினர்.

டிவினோ மாவட்டத்தில் வெள்ளம் எதிரொலியாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. அவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு வேறு இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அவர்களுக்கு வேண்டிய உணவு, மருந்து, போர்வை உள்ளிட்ட நிவாரண பொருள்களை வழங்குவதற்காக இராணுவ ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்று புறப்பட்டு சென்று உள்ளது.

அந்த ஹெலிக்கொப்டர் புறப்பட்ட சிறிது நேரத்தில் திடீரென விபத்திற்குள்ளானது. இந்த சம்பவத்தில், வீரர்கள் 5 பேர் மற்றும் பொதுமக்களில் 3 பேர் என மொத்தம் 8 பேர் உயிரிழந்து உள்ளனர். அவர்களின் உடல்களை பொலிஸார் மீட்டு பிரேத பரிசோதனைக்குக் கொண்டு சென்றனர்.

# ரஷ்யாவில் இருந்து இந்தியா நோக்கி வந்த வணிகக் கப்பல் மீது ஏவுகணைத் தாக்குதல்

## ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்தினர்

**சனா,ஏப்.27**

ரஷ்யாவில் இருந்து இந்தியா நோக்கி வந்த வணிக கப்பல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணைகளை கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

காசாவில் உள்ள ஹமாஸ் அமைப்பினருக்கும் இஸ்ரேலுக்கும் இடையே கடந்த ஆண்டு ஒக்டோபர் முதல் சண்டை நடைபெற்று வருகிறது. ஆறு மாதங்களுக்கும் மேலாகியும் இந்த போர் நீடித்து வருகிறது. இந்தப் போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவாக நிற்கும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள், செங்கடலில் பயணிக்கும் இஸ்ரேல் மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு ஆதரவான கப்பல்களை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறார்கள். இதனால், செங்கடல் பகுதியில் கடந்த சில மாதங்களாக வணிக கப்பல் போக்குவரத்து பாதிக்கப்பட்டு இருக்கிறது.

இந்த நிலையில், செங்கடலில் உள்ள ஆண்ட்ரோமெடா ஸ்டார் என்ற எண்ணெய்க் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பனாமா கொடியுடன்



வந்து கொண்டிருந்த இந்த கப்பல் பிரிட்டன் நாட்டிற்குச் சொந்தமானது என்று ஹவுதி செய்தித் தொடர்பாளர் யாஹ்யா சாரியா தெரிவித்துள்ளார். இந்த டாங்கர் கப்பல் இப்போது ரஷ்யாவுடன் தொடர்புடைய வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளது. ரஷ்யாவின் ப்ரிமோர்ஸ்கில் இருந்து இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உள்ள வாடினாருக்கு வந்து கொண்டிருந்தது என்று தகவல் வெளியாகியுள்ளது.

ஹவுதி கிளர்ச்சியாளர்கள் இதுபோல தொடர்ந்து தாக்குதல் நடத்துவதால் வணிக கப்பல்கள் ஆப்பிரிக்காவைச் சுற்றிச் செல்ல வேண்டி உள்ளது. இது செலவை அதிகரிப்பதால் சர்வதேச வணிக போக்குவரத்து இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வெள்ளியன்று இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் கப்பல் சேதமடைந்துள்ளது. பல சுற்று ஏவுகணைகள் கப்பலைத் தாக்கியுள்ளன.

கனடா முரசு
பக்கங்கள் 06
சனிக்கிழமை 27/04/2024

## எட்டோபிகொக் பகுதியில் சிறுவனை மோதிய டிரக்!

ஒன்ராரியோ, ஏப்ரல் 27
எட்டோபிகொக் பகுதியில் டிரக் ஒன்றுடன் மோதி 11 வயது சிறுவன் ஒருவர் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளான்.

C2





# பூர்வீகக் குடியினரின் எதிர்காலம் நோவா ஸ்கோச்சியாவில் பிரகாசம்

## விஜயத்தின் பின் அமைச்சர் கெரி திருப்தி

நோவா ஸ்கோச்சியா, ஏப்ரல் 27
நோவா ஸ்கோச்சியாவுக்கான விஜயம் எதிர்காலம் குறித்து நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாக பூர்வீகக்குடிகள் நலன்பேண் அமைச்சர் கெரி ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

நோவா ஸ்கோச்சியாவின் பூர்வீகக் குடியினருக்கும், இன சிறுபான்மை குழுக்களுக்கும் நியாயமான எதிர்காலத்திற்கான வழி தென்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நோவா ஸ்கோச்சியா விஜயம் தொடர்பில் தமது சமூக ஊடகத்தளத்தில் படங்களை வெளியிட்டுள்ள அமைச்சர் ஆனந்தசங்கரி, ரெட் டிரஸ் எலர்ட், மிக்மோவ் சட்ட உதவி வலையமைப்பு, குருத்வார் சங்கம் மற்றும் ஆபிரிக்க நோவா ஸ்கோச்சியா நீதி கல்வி நிறுவனம் என்பவற்றின் செயற்பாடுகளை பாராட்டியுள்ளார்.

# பொது இடங்களில் போதைப் பாவனைக்கு பிரிட்டிஷ் கொலம்பியாவில் மீண்டும் தடை

பிரிட்டிஷ் கொலம்பியா, ஏப்ரல் 27
பொது இடங்களில் போதைப்பொருள் பயன்பாட்டை பிரிட்டிஷ் கொலம்பியா மீண்டும் தடை குற்றமாக்கியுள்ளது.

வைத்தியசாலைகள், பூங்காக்கள் மற்றும் பஸ் நிலையங்களில் பிரச்சினைக்குரிய போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்ததன் விளைவாகவே பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணம் இந்த நடவடிக்கை எடுத்துள்ளது.

மக்களின் பாதுகாப்பே தமது பிரதான நோக்கம் என மாகாண முதல்வர் டேவிட் எபி வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போதைப்பொருளுக்கு அடிமையாகியிருப்பவர்களுக்கான சிகிச்சை வழிகளை பரவலாக்குவதன் மூலம் பாதுகாப்பான மற்றும் சௌகரியமான சமூகங்களை உறுதி செய்வதற்கு பொலிஸாரிடம் போதிய கருவிகள் இருப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக டேவிட் எபி குறிப்பிட்டுள்ளார்.





# இராணுவ நீதிபதிகளின் முன்னால் படையினர் முன்னிலையாகின்றமை உரிமை மீறல் அல்ல!

## கனடா உச்ச நீதிமன்றம் தெரிவிப்பு

ஒன்ராரியோ, ஏப்ரல் 27

இராணுவ நீதிபதிகளின் முன்னர் முன்னிலையாகும் இராணுவ வீரர்களின் நீதி சுதந்திரத்தின் அரசமைப்பு உரிமை மீறப்படவில்லை என கனடா வின் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அதிகார கட்டமைப்புக்குள் உள்ள இராணுவ அதிகாரிகளின் பிளவுபட்ட சார்பின் காரணமாக தமது அரசமைப்பு உரிமை மீறப்பட்டுள்ளதாக கனடிய ஆயதப் படையைச் சார்ந்த ஒன்பது அதிகாரிகள் உச்ச நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

தமது உயர் பீடங்களில் இருந்து வரும் அழுத்தம் கார ணமாக தாம் இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்களாக இருப்பதால், நீதி சுதந்திரம் குறைவாக இருப்பதனை சில இராணுவ நீதிபதிகள் ஏற்றுக்கொண்டிருந்தனர்.

# சசகெச்சுவானின் தென்கிழக்கில் வீடொன்றில் பெண்ணின் சடலம்!




சசகெச்சுவான், ஏப்ரல் 27

சசகெச்சுவானின் தென்கிழக்குப் பகுதியில் வீடொன்றில் இருந்து பெண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டமை தொடர்பில்பொலிஸார்விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் 27 வயதான நபர் ஒருவர் கைது செய்யப் பட்டு, கொலைக்கு உடந்தையாக இருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள் ளது.

அத்துடன், மேலதிக விசாரணைக ளுக்கு மற்றுமொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் ஏதேனும் விவரங்கள் தெரிந்தால் பொலிஸாரை தொடர்பு கொள்ளுமாறு பொது மக்க ளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



**எட்டோபிகொக்...**

விபத்தின் பின்ன டிரக்கைச் செலுத்தி வந்த நபர் சம்பவ இடத்திலேயே இருந்தார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுவனின் நிலை குறித்து வைத்தியசாலையில் இருந்து தகவலை எதிர்பார்த்துள்ளனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



# ஒன்ராரியோவில் நாளையே மிகவும் வெப்பமான ஏப்ரல்!

ஒன்ராரியோ, ஏப்ரல் 27

ஒன்ராரியோ வரலாற்றில் மிகவும் வெப்பமான ஏப்ரல் மாத காலநிலை நாளை ஞாயிற்றுக்கிழமை பதிவாகும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

ஏப்ரல் 28ஆம் திகதிக்கான வானிலை வழமையிலிருந்து வேறுபட்டு 8 பாகை செல்சியஸ் அதிகரிப்புடன், 22 பாகை செல்சியஸாகப்பதிவாகும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

எனினும், 1938ஆம் ஆண்டு பதிவாகிய 28 பாகை செல்சியஸ் என்ற அளவினை எட்டாது எனவும் என்வைரன்மன்ட் கனடா தெரிவித்துள்ளது.




# மொசைக் பொட்டாஷ் தொழிலுக்கு 600 மில்லியன் டொலர் வரிவிலக்கு

சசகெச்சுவான், ஏப்ரல் 27

மொசைக் பொட்டாஷ் தொழில் துறைக்கு மத்திய அரசாங்கம் 600 மில்லியன் டொலர்கள் வரிவிலக்கை அறிவித்துள்ளது.

சசகெச்சுவானின், பெல் பிளெய்ன் மொசைக் பொட்டாஷ் தொழிற்சாலைக்கு விஜயம் செய்த வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி, நாட்டிற்கு இந்த தொழில்துறையின் முக்கியத்துவத்தை விளக்கினார்.

மேலதிக வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதனை நோக்கி அரசாங்கம் செயற்பட்டு வருவதாக இதன்போது, அமைச்சர் ஜொலி தெரிவித்தார்.



# கெஃபியே உடைக்கான தடையை நீக்காது விட்டால் அதை மீறுவோம்

## மாகாண சபை உறுப்பினர் எச்சரிக்கை


ஒன்ராரியோ, ஏப்ரல் 27

ஒன்ராரியோ மாகாண சபையில் விதிக்கப்பட்ட கெஃபியே அணிவதற்கான தடையை நீக்குவதற்கு முதல்வர் டக் ஃபோர்ட் நடவடிக்கை எடுக்க வேண்டும் என புதிய ஜனநாயகக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர் மரிட் ஸ்டைல்ஸ் கோரியுள்ளார்.

தடையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனின், விதிகளை மீறுவதற்கு தாமும், தமது புதிய ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களும் தயங்கமாட்டார்கள் என சமூக ஊடகத்தில் காணொலி ஒன்றை வெளியிட்டுள்ள அவர் தெரிவித்துள்ளார்.

அராபியர்கள் மற்றும் முஸ்லிம்கள் அணியும், பலஸ்தீனியர்களுடனான ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் அடையாளமாக மாறியுள்ள கெஃபியேவை குயின்ஸ் பார்க்கில் அணிவதற்கு கடந்த வாரத்தில் சபாநாயகர் தடை விதித்திருந்தார்.

இதன் காரணமாக, ஏப்ரல் 25ஆம் திகதி ஒன்ராரியோ மாகாண சபை உறுப்பினர் சாரா ஜமா மாகாண சபை அமர்விலிருந்து வெளியேறுமாறு பணிக்கப்பட்டார்.




# உக்ரைனின் ட்ரோன் தயாரிப்புக்காக கனடா 3 மில்லியன் டொலர் உதவி!


ஒன்ராரியோ, ஏப்ரல் 27

உக்ரைனின் ட்ரோன் தயாரிப்புக்காக 3 மில்லியன் டொலர்களை கனடா வழங்கவுள்ளது.

மேற்கத்தைய நாடுகள் உக்ரைனுக்கான புதிய தொகுதி நிதியுதவியை அறிவித்துள்ள நிலையில், கனடாவின் இந்த நிதி வழங்கல் குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஐக்கிய இராச்சியத்துடன் இணைந்ததாக இந்த நிதியுதவி வழங்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சர் பில் பிளயார் தெரிவித்தார்.

இதுவரை இராணுவத் தளபாடங்கள் ஊடாக உதவி வழங்கி வந்த கனடா, முதன்முறையாக உக்ரைனின் பாதுகாப்புத் துறைக்கு நிதி வழங்குவது குறிப்பிடத்தக்கது. அத்துடன், உக்ரைனுக்கு விரைவில் ஆயுதங்களை வழங்குவதற்காக செக் குடியரசுக்கு மேலதிகமாக 13 மில்லியன் டொலர்களை கனடா அரசாங்கம் வழங்கவுள்ளது.



# கனடாவில் இளைய தலைமுறையினரை தாக்கும் மார்பகப் புற்று நோய்ப் பாதிப்பு

கனடாவில் இளைய தலைமுறையினர் மத்தியில் மார்பகப் புற்று நோயின் தாக்கம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

20, 30 மற்றும் 40 வயதுகளை உடையவர்கள் மத்தியில் மார்பகப் புற்று நோய் அதிகரித்துச் செல்வதாக ஒட்டாவா பல்கலைக்கழக ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1984 - 1988 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பீடு செய்யும் போது 2015 முதல் 2019 ஆம் ஆண்டுகள் வரையிலான காலப் பகுதியில் இளம் வயது மார்பகப் புற்று நோயாளர் எண்ணிக்கையில் பாரியளவு அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

பொதுவாக 20 மற்றும் 30 வயதான பெண்களிடம் மார்பகப் புற்று நோய் தொடர்பிலான பரிசோதனைகள் அதிகளவில் மேற்கொள்ளப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இள வயது புற்று நோயாளர்களை முன்கூட்டியே அடையாளம் காணும் வகையிலான பரிசோதனைகள் விரிவுபடுத்தப்பட வேண்டுமென ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# சூரிய கிரகணத்தை நேரடியாகவே பார்த்தவர்களுக்கு கண் உபாதை


கனடாவில் கடந்த எட்டாம் திகதி சூரிய கிரகணத்தை நேரடியாகப் பார்த்தவர்களுக்கு கண் உபாதைகள் ஏற்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவின் கியூபெக் மற்றும் ஒன்றாரியோ ஆகிய மாகாணங்களில் இந்தப் பாதிப்புக்கள் பதிவாகியுள்ளன.

சூரிய கிரகணம் காரணமாக கண் பாதிப்புக்களை எதிர்நோக்கிய 160 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

சிலருக்கு நிரந்தர பார்வைக் குறைபாடு ஏற்படக்கூடிய அளவிற்கு பாதிப்புக்கள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டின் அநேக பகுதிகளில் சூரிய கிரகணம் தென்பட்ட போது மிகவும் பாதுகாப்பான வழிமுறைகளில் மக்கள் அதனை பார்வையிட்டுள்ளனர்.



இதனால் ஆபத்துக்கள் குறைவாக பதிவாகியிருந்தன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் சில இடங்களில் சூரிய கிரகணத்தை சிலர் பாதுகாப்பற்ற வழிமுறைகளைப் பயன்படுத்தியமையால் கண் பாதிப்புக்கள் பதிவாகியுள்ளன.



# கனடா தமிழர்களை மெச்சுகின்றார் ஒன்டாரியோ முதல்வர் டக் ஃபோர்ட்

கனடாவில் வாழுகின்ற தமிழ் மக்கள் மீது தமக்கு அதிக ஈர்ப்பு உள்ளதாக ஒன்டாரியோ முதல்வர் டக் ஃபோர்ட் (ஞுழரப குழசன) தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் தமிழ் வர்த்தகர்களுடன் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழ் சமூகம் மீது தனக்கு மரியாதை உள்ளதாக அவர் குறிப் பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

கடுமையான உழைப்பு திறனை கொண்டமையே இதற்கு காரணமாகும். வெறும் கையுடன் கனடாவுக்கு வந்த பல தமிழர்கள் இன்று பாரிய முன் னேற்றம் அடைந்துள்ளனர்.

பல்வேறு தொழில் முயற்சிகளை மேற்கொண்டு முன்னேறியுள்ளனர். உணவகங்கள், வர்த்தக நிலையங்கள் என உருவாக்கி தொழில் துறையினை தமிழர்கள் வளர்த்துள்ளனர்.

பிள்ளைகளுக்கு சிறந்த முறையில் கல்வியை வழங்குகின்றனர். உங்கள் இலக்கை நோக்கி சரியான



பாதையில் செல்கின்றீர்கள். இதன் காரணமாக தமிழ் சமூகத்தை எனக்கு மிகவும் பிடிக்கும். – என அவர் தெரிவித்துள்ளார்.

# பாவனைக்கான சிறப்புக் காலத் திகதி முடிந்த உணவைப் பயன்படுத்தாதீர்கள்!

## கனடா மக்களுக்கு நிபுணர் எச்சரிக்கை

விலைவாசி அதிகம் என்பதற்காக Best before date முடிந்த உணவை வாங்கிச் சாப்பிடாதீர்கள் என்கிறார் கனேடிய நிபுணர் ஒருவர்.

சமீபத்திய ஆய்வில் தெரியவந்த உண்மை ஒன்று இது பற்றி விளக்குகின்றது

கனேடியர்கள், Best before date முடிந்த உணவை சாப்பிடு வதுண்டா என்பதை அறிய, ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. ஆய் வில் பங்கேற்றவர்களில் 30 வயது முதல் 45 வயது உடைய வர்களில் 41 சதவிகிதம்பேர், தாங்கள் கடந்த ஆண்டு Best before date முடிந்த உணவை சாப்பிட்டதாக தெரிவித்தார்கள்.

45 வயது முதல் 65 வயது வரையுள்ளவர்களில் 24 சதவிகிதத்தினரும், 60 வயது முதல் 75 வயதுவரை யுள்ளவர்களில் 20 சதவிகிதத்தினரும், 1946க்கு முன் பிறந்தவர்களில் 10 சதவிகிதத்தினரும், இளைய தலை முறையினரில் 10 சதவிகிதம்பேரும், தாங்கள் கடந்த ஆண்டு டிநளவ டிநகழசந னயவந முடிந்த உணவை சாப்பிட்டனர் எனத் தெரிவித்தார்கள்.

Best before date என்பதற்கும் காலாவதி திகதி அல்லது நஒpசைல னயவந என்பதற்கும் வித்தியாசம் உள்ளது என்பது உண்மைதான். அதாவது, காலாவதி திகதியைக் கடந்த உணவை உண்ணவே கூடாது, ஆனால், Best before date ஐக் கடந்த உணவுகளைப் பொருத்தவரை, அந்த திகதிக்குப் பின் அந்த உணவுகளின் தரம் குறைந்திருக்கும் என்று பொருளேயொழிய, அதை சாப்பிடக்கூடாது என்பது பொருள் அல்ல.

என்றாலும், Best before date திகதி முடிந்த சில உணவுப்பொருள்கள், குறிப்பாக, இறைச்சி, நாற்றம் ஏற்படும் அளவுக்கு மோசமாகியிருக்கும் பட்சத்தில், அல்லது, Best before date திகதி முடிந்த முட்டைக்கோஸ் பூசணம் பூத்திருப்பது தெரிந்தும், இதுபோன்ற உணவுப்பொருள்களை வாங்கி உட்கொள்வதால், நீங்கள் மிச்சம் பிடிக்க நினைத்த பணத்தைவிட அதிக பணத்தை மருத்துவமனையில் செலவிடவேண்டியிருக்கும் என்கிறார் உணவுத்துறை நிபுணரான பேராசிரியர் Sylvain Charlebois.

விடயம் என்னவென்றால், ஒரு காலத்தில் Best before date திகதி பார்த்துப் பார்த்து உணவுப்பொருடள்களை வாங்கிவந்த மக்கள், கொரோனா காலகட்டம் மற்றும் உக்ரைன் போர் துவங்கியதால் ஏற்பட்ட விலைவாசி உயர்வுக்குப் பிறகு, விலை குறைவான பொருள்கள் கிடைக்குமா என்று பார்க்கத் துவங்கிவிட்டார்கள்.